**அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2015**

---

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அத்தியாயம்) 24(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று, வருமானச் செலவினக் கணக்குகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை**

---

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கு நியமம் - 01**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களில் தேறுகின்ற சொத்துக்கள், நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது காலாவதியாவதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 12,329,351,667

கூட்டுத்தொகையான திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீதான முதலீடு நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அங்கத்தவர் பங்களிப்புப் பணம் பெறுவனவு அட்டுறு அடிப்படையிலிருந்து விலகி காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2016 சனவரி 04 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 10,500,000 தொகையான திறைசேரி உண்டியல்கள் மீளாய்வாண்டிற்குரிய முதலீடாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 8,181,370 தொகையால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் காணப்பட்ட ரூபா 3,369,222 தொகை மற்றும் 2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 13,032,876 தொகையுடன் ஒன்றுசேர்த்து ரூபா 16,402,098 கூட்டுத்தொகையான வரவு மீதியும் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ரூபா 85,823 தொகையான செலவு மீதிகளும் பிழையாக வரவு மற்றும் செலவாக பேரேட்டுக் கணக்கில் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனை இனங்கண்டு தீர்த்து வைக்காமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) பிழையாகப் பதியப்பட்டதன் காரணமாக, கட்டாய பங்களிப்புப் பணப் பெறுவனவு ரூபா 20 மில்லியன் மற்றும் அதற்குரிய அரசாங்கத்தின் பங்களிப்புப் பண பெறுவனவாக ரூபா 30 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் பங்களிப்புப் பெறுவனவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி பிணைமுறி முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 335,196,303 தொகை குறைவாகவும், நிலையான வைப்பு முதலீடு மற்றும் ரூபாய்க் கடன் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,888,731 அதிகமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி பிணை முறிக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 18,006,622 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முதலீட்டு வட்டி வருமானத்திற்கான வரிச் செலவினம் ரூபா 589,704 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் காசும் அதற்குச் சமமான விடயங்களினதும் மீதிக்கும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் காசும் காசுக்குச் சமமான விடயங்களின் மீதிக்குமிடையே ரூபா 264,815,707 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி பிணைமுறி முதலீட்டு மீதி ரூபா 40,786,765,676 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 41,320,115,659 ஆனமையால் வேறுபாடு ரூபா 533,349,983 ஆகும்.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தனிப்பட்ட கணக்குகளைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 17,389,588,560 தொகையான கட்டாய பங்களிப்புப் பணக் கணக்கின் மீதி, ரூபா 26,677,186 தொண்டர் பங்களிப்புப் பணக் கணக்கின் மீதி மற்றும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணம் ரூபா 734,148,603 என்பவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. மேலும் கட்டாய பங்களிப்புப் பணம் செலுத்தப்படுகின்ற பங்களிப்பாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை மீதியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறுவாகக் காணப்பட்ட ரூபா 10,641,600 தொகையான செலவினம் 2016 ஆகஸ்ட் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அத்தியாயம்) | |
| | (i) 7(1) ஆம் பிரிவு | 12 சதவீதமான அரசாங்கத்தின் பங்களிப்பு திறைசேரி பிரதி செயலாளரிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக கட்டாய பங்களிப்புப் பணம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்புப் பணம் என்ற இரண்டிற்கும் உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர் கணக்குகளில் உள்ள மீதிகள் தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், ஆரம்பம் முதலே அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 188(2) | 2014 மே முதல் 2015 செப்தெம்பர் வரை வைப்புச் செய்யப்பட்டிருந்தும் ஓய்வு பெறச் செய்யப்படாத ரூபா 471,879 கூட்டுத்தொகையான 32 காசோலைகள் தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 165,319 கூட்டுத்தொகையான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 486 | மீளாய்வாண்டின் போது கிடைத்து மதிப்பிழந்திருந்த ரூபா 540,345 கூட்டுத்தொகையான 21 காசோலைக்குரிய பங்களிப்புப் பணத்தை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை — மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தேறிய பெறுமதி ரூபா 233,621 ஆன நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 3,400,249,686 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,227,101,270 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 173,148,416 அதிகரிப்பைக் காண்பித்திருந்தது. முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 167,648,618 இனால் அதிகரித்தமை மற்றும் ஆளணி வேதனங்கள் ரூபா 4,506,079 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளிதத்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது ரூபா 2,426,308,059 தொகையான 2011 ஆம் ஆண்டின் மிகை 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 3,400,249,686 ஆக இருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது ரூபா 2,435,622,100 தொகையான 2011 ஆம் ஆண்டின் பங்களிப்பு, 2012 ஆம் ஆண்டிலிருந்து முதல் தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 3,405,718,653 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணிப்பிடப்பட்ட சில விகிதங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) தொழிற்படு மூலதன விகிதங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நடைமுறை விகிதம் | 284:1 |
| (ii) | விரைவு விகிதம் | 175:1 |

நடைமுறை விகிதத்தையும் விரைவு விகிதத்தையும் உயர் வீச்சில் வைத்திருப்பதற்காக பெறவேண்டிய அரசாங்கப் பங்களிப்புப் பணத்தின் அளவு ரூபா 1,328 மில்லியன் அண்ணளவான உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

ஓய்வூதியம் கிடைக்காத அரசாங்கத்தின் சில ஊழியர்களுக்கு நலன்களை வழங்கும் அடிப்படை நோக்கத்துடன் அரசாங்க சேவை சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது.

அந்த நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட 3,214 விண்ணப்பங்களை உள்ளடக்கிய நிதியத்தின் அங்கத்தவர்களினால் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 9,456 இற்கிடையே 5,604 விண்ணப்பங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான கட்டாய வட்டியான 2.5 சதவீதத்துடன் மீளாய்வாண்டிற்கான 8.7 சதவீத வட்டி விகிதமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்காக 8.9 சதவீதமே செலுத்தப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டிற்காக அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதம் 3.3 சதவீதத்தாலும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டிற்காக அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி விகிதம் 0.2 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆகஸ்ட் முதல் பங்களிப்புத் திட்டத்தின் பதிவிற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பித்த 559 நபர்களுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அங்கத்துவ இலக்கம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களைப் பெறும்போது விண்ணப்பம் கிடைத்த திகதி குறிப்பிடப்படாமையினால் பதிவு இலக்கம் வழங்குவதன் செயற்திறமை தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கின்ற ஒழுங்கின் பிரகாரம் அங்கத்துவ இலக்கம் விநியோகிக்கப்படுகின்றமையால்

கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பிரகாரம் பூர்த்தி செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் குறைபாடுகள், வழுக்கள் காணப்பட்டமையின் காரணமாகவும் பரீட்சித்து அந்த நிறுவனத்துடன் மீண்டும் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொண்டமையினால் சுற்றறிக்கையின் மூலம் நிறுவனம் அறிவித்திருந்தும் குறைபாடுகளுடனான விண்ணப்பங்கள் அனுப்புதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதனால் அங்கத்துவ இலக்கத்தை விநியோகித்தலில் தாமதம் ஏற்படுவதாகவும், 2015 ஆம் ஆண்டின் இறுதி அளவில் கிடைத்த 6,717 விண்ணப்பங்களில் 6,358 விண்ணப்பங்களுக்காக அங்கத்துவ இலக்கம் விநியோகிக்கப்பட்டிருந்ததாகவும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் அலுவலக செயற்பாடுகளுக்குரிய ஆவணங்களை பேணிச் செல்லும் போது முறையானதும் சரியானதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்படாமையின் காரணமாக அவற்றின் பாதுகாப்பற்ற தன்மை தொடர்பில் கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி செயலாளரிடமிருந்து அறவிட வேண்டிய அரசாங்கத்தின் பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் நிதியத்திற்குக் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டி இருந்த ரூபா 2,696,345,662 தொகையான அரசாங்கத்தின் பங்களிப்புப் பணம் சாதாரண திறைசேரி பிணை முறியின் வட்டியான 8 சதவீதத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 215,707,653 தொகையான வட்டி வருமானமொன்றை நிதியம் இழந்திருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ஓய்வூதியத் திணைக்களத்தின் பொதுக் கணக்கிலிருந்து நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 454,000,000 தொகையான அரசாங்கத்தின் பங்களிப்புப் பணம் 9 மாதங்கள் தாமதமாகி 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதி கிடைத்தமையின் காரணமாக நிதியத்திற்கு அக்காலப்பகுதிக்காக ரூபா 24,005,525 இற்கு அண்ணளவான முதலீட்டு வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 4.3 நிதியத்தின் பயன்பாடு

அரசாங்க வங்கிக் கிளை ஒன்றில் நிதியத்திற்குரிய நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மிகையான காசு மீதி நீண்டகாலமாக விளைவற்று வைக்கப்பட்டமையின் காரணமாக அந்தப் பணம் குறுகிய கால நிதி மூலங்களில் முதலீடு செய்வதால் உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை இழந்திருந்தது. நடைமுறை கணக்கில் காணப்பட்ட காசு மீதி தொடர்பான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| காலப்பகுதி | ஆகக் கூடிய தொழிற்படு மூலதன தேவைக்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டதன் பின்னர் கணக்கில் காணப்பட்ட மிகையான மீதி |
|---|---|
| 2015 சனவரி 02 முதல் சனவரி 29 வரை | ரூபா 24,000,000 இற்கும் ரூபா 51,000,000 இற்கும் இடையிலான மீதி |
| 2015 செப்தெம்பர் 03 முதல் ஒக்தோபர் 02 வரை | ரூபா 81,000,000 இற்கும் ரூபா 118,000,000 இற்கும் இடையிலான மீதி |
| 2015 ஒக்தோபர் 05 முதல் ஒக்தோபர் 29 வரை | ரூபா 158,000,000 இற்கும் ரூபா 191,000,000 இற்கும் இடையிலான மீதி |

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாழுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 10 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்தபோது 15 சதவீதம் முதல் 174 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பரிவினால் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை மற்றும் கணக்கேடுகள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை. |
| (ஆ) | அங்கத்தவர் தனிப்பட்ட கணக்குகளின் கட்டுப்பாடு | பங்களிப்பாளர்களுக்காக தனிப்பட்ட கணக்குகள் பேணப்படாமை மற்றும் அங்கத்துவத்தை நீக்கும் பதிவேடுகள் நாளதுவரையான முறையில் பேணப்படாமை. |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | அங்கத்தவர்களுக்காக ஆகக் கூடிய நலன்கள் கிடைக்கும் வகையில் மிகையான நிதி முதலீடு செய்யப்படாமை மற்றும் காசோலைப் பெறுவனவுகள் உரிய பிரகாரம் பதிவேடுகளுக்குக் கொண்டு வரல் மற்றும் கணக்கீடுகள் தொடர்பில் மேற்பார்வை செய்யாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | செயற்பாட்டு முகாமைத்துவம் | அங்கத்தவர் இலக்கம் விநியோகித்தல், பதிவு செய்தல், அங்கத்தவர் பங்களிப்புப் பணம் மீளச் செலுத்துதல் போன்ற செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்திறனாக நிறைவேற்றப்படாமை. |